(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கான திட்டமிட்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகிவிட்டன. கட்டிடம் கட்டுவதற்கான நிலமும் பொதுமக்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளாகிவிட்டன என்று மாண்புமிகு அங்கத்தினர் கூறினார். இது அரசாங்கத்தினுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதாக இல்லை என்றார். கட்டிடம் கட்டப்படவில்லை என்பது குறை. அதற்கு வேண்டிய நிதிவசதியை தர முடியாததாக இருந்திருக்கலாம். அதைவிட கட்டிடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலம் தர வேண்டும். ஆனால் அவர்களோ தந்திருப்பது 3 ஏக்கர்தான். Only three acres are available for construction of buildings. ஐந்து ஏக்கர் நிலம் தரவேண்டும். மேலும், இதற்காக ஒரு அடையாளத் தொகையாக 10 ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டும். இந்தத் தொகையும் இதுவரையில் தரப்பட்டதாக அரசாங்கத்தின் குறிப்பில் இல்லை. ஆகவே, அவர்கள் ஆக்க வேண்டிய பணிகளை முதலில் செய்து முடித்துவிட்டு, அரசாங்கத்தின் ஆக்க வேலைகளைப் பற்றிச் சொன்னால், அது பற்றி கவனிக்கலாம்.

* 71 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any scheme under the consideration of the Government to increase the bed facilities in the Primary Health Centre of Melmalaiyanur Panchayat Union; and

(*b*) if so, when?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது 6 படுக்கைகள் உள்ளன. பக்கத்திலுள்ள செஞ்சி வட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையில் 16 படுக்கைகள் உள்ளன. எங்கள் பகுதிகளிலுள்ள ஏழை விவசாய மக்கள் நோய்வாய்ப்பட்டு, ஆஸ்பத்திரியில் அட்மிஷன் ஆகிறபோது வசதியில்லாத காரணத்தினால் அவர்களை மரத்தடியில் படுக்க வைக்கின்ற கோரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்யுமா ?

1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய பகுதிக்கு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கோருகிற உரிமை இருக்கிறது. இப்பொழுது உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோருகிற உரிமை கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. ஆனால், அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட வசதி இல்லை.

காசநோய் மருத்துவ மனைகள்

***72 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை-செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழ்நாடு அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழக அரசு வழங்கிய மானியத் தொகை ரூ. 37,920.81. அதன் விவரம் பின்வருமாறு—

1968-69-ஆண்டுக்காக	ரூ. 26, 920.81
1970-71-ஆண்டுக்கு முன்பணம்	ரூ. 11,000.00

***73 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் நடமாடும் காசநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மதுரை மருத்துவ மனைக்கு காசநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் கிராமங்களிலிருந்து தினசரி வருகிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இடவசதிக்காக பதிவு செய்துகொண்டவர்களுக்குக்கூட இடம் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, இந்தக் குறையைப் போக்க நடமாடும் காசநோய் மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தி, கிராமங்களுக்குத் தினசரி சென்று நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காசநோய் தடுப்புத் திட்டம் என்பது ஒவ்வொரு மருத்துவமனையோடும் தனிப்பட்ட முறையில் இணைக்கப்பட்டு செயலாற்றப்படுகிறது. நடமாடும் மருத்துவமனையாக இயங்குவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய் தடுப்பக்கூ இயங்கி வருகிற உந்து வண்டிகள் மூலமாக மாவட்ட அளவில் நடைபெறுகிறது. ஏதாவது